# திருக்குறளும் தனிமனித வாழ்வும்

8

ரா. ருஃபினா
இளங்கலை கணினி அறிவியல்
இரண்டாம் ஆண்டு, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 620 002

**ஆய்வுச் சுருக்கம்:**

**சென்றே எறிப ஒருகால்; சிறு வரை**
**நின்றே எறிப பறையினை; நன்றேகாண்**
**முக் காலைக் கொட்டினுள்,**
**மூடி தீக் கொண்டு எழுவர்**
**செத்தாரைச் சாவார் சுமந்து!**

என்ற நாலடியார் பாடல் வாழ்க்கையின் குறுகிய தன்மையையும் யாக்கை நிலையாமையையும் அதனால் வாழ்க்கையை பயனுள்ள வகையில் வாழ வேண்டிய கட்டாயத்தையும் உணர்த்துகிறது. நாலடியாரின் இறுதி வரி நம்மை ஆழமாய் சிந்திக்க அழைக்கிறது, "செத்தாரைச் சாவார் சுமந்து". இன்று இறந்தவரை நாளை இறக்க போகின்றவர்கள் சுமந்து போகின்றார்கள் என்று இறப்பு ஒன்றே இவ்வுலகில் நிலையானது என்பதை உணர்த்தி போகின்றது இவ்வரிகள்.

சாகும் வரை வாழ்வதல்ல வாழ்க்கை. வாழும்வரை ஒவ்வொரு கணமும் வாழ்வதே சிறப்பு. இந்த வாழ்வை எப்படி வாழவேண்டும் என்ற அறிவுரையை எந்த மனிதனும் இது வரை சொன்னதில்லை. ஒவ்வொரு வாழ்க்கையும் அதனதன் பாதையில் வேறுபடுகின்றன. அப்படிப்பட்ட வாழ்க்கைக்கான ஒரு குறிப்பேடாகத்தான் திருக்குறளை நான் காண்கிறேன். இந்த ஆய்வின் அடிப்படையும் இந்த கருத்தோட்டம்தான். எப்படி வாழ வேண்டும்? ஏன் வாழவேண்டும்? என்ற தெளிவை இந்த ஆய்வு கட்டுரை அளிக்கும் என்றே நம்புகிறேன்

**திறவுச் சொற்கள்:**

யாக்கை - உடல்

ஆள்வினை - முயற்சி

இன்மை - வறுமை

பரிந்து - வருந்தி

வாய்மை - உண்மை

**முன்னுரை:**

*'நல்ல மகனாய்ப் பிறந்தும் சும்மா திரியாதே; சான்றோன் எனத் திரி"*

என்பது ஔவையின் வாக்கு. மனிதனை நல்வழி படுத்துவதில் தமிழ் இலக்கியங்கள் பெருமுயற்சி எடுக்கின்றன. தனி மனிதனாகவும் சமுதாயத்தின் ஒரு அங்கமாகவும் மனிதனை பண்படுத்துவது இலக்கியங்களின் பெரும் கடமையாகவே அமைந்து விட்டது என்றால் மிகையாகாது.

மனிதனை தனது பிற நலன்களை தாண்டி நல்வழிப்படுத்துவது அவனது குண நலன்களே. வீடு வாசல் சொத்து குடும்பம் வேலை அழகு செல்வம் வண்டி வாகனம் ஆடை அணிகலன் பட்டம் பதவி முதலிய நலன்களையெல்லாம் அடக்கி அதன் மேல் உயர்ந்து நிற்பது மனிதனின் குணநலன் ஒன்றேயாகும். குண நலன் இன்றேல் மனிதன் ஒரு ஆறறிவுள்ள விலங்குதான்.

உடலுக்கு உடைமைகளை நாம் அணிவது போல, உள்ளத்திற்கும் உடைமைகளை அணிய கற்றுத்தருகிறார் வள்ளுவர்.

**வள்ளுவர் வாழ்வு நெறி காட்டும் உடைமைகள் ஐந்து:**

1. அன்புடைமை
2. அறிவுடைமை
3. ஆள்வினையுடைமை
4. ஒழுக்கமுடைமை
5. பண்புடைமை

மேற்சொன்ன அதிகாரங்களின் அடிப்படையில் மனிதவாழ்க்கையின் போக்கை

ஆராய்வோம்.

**அன்புடைமை:**

இந்த மனித உடல்தான் எத்தனை அற்புதமானது? எத்தனை எத்தனை கோடான கோடி அணுக்கள் இணைந்து நம்மை நாமாக்கியிருக்கிறது.

காது மடல்கள் அற்புதமான வடிவத்தில் உள்ளன. இவை இல்லாவிட்டால் சத்தம் நேரடியாக தலைக்குள் மோதி உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தி விடுமாம்.

கண்கள் வளர்வதில்லை, பிறக்கும் போது இருந்த அதே அளவில்தான் இருக்கும். ஆனால், காதுகளும் மூக்கும் வளர்ந்து கொண்டே இருக்குமாம்.

ஆனால் வள்ளுவர் நமக்களிக்கும் உடலின் கூறுபாடோ முற்றிலும் வேறுபாடானது.

அன்பை அடிப்படையாகக் கொண்டதே உயிர் நிறைந்த இந்த உடம்பு, அன்பு மட்டும் இல்லை என்றால் இந்த உடம்பு வெறும் எலும்பின்மேல் தோலைப் போர்த்தியது போன்றது ஆகும் என்கிறார். அன்பு இல்லாத மனிதன் வெறும் பிணத்துக்கு ஒப்பு என்று கூறுகிறார்.

'அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு"

பிறர் குறைகளை கணக்கிடுவதை விட்டுவிட்டு, அன்பு செய்ய கற்று கொள்வோம். அன்னை தெரசா கூறுவது தான் நிதர்சனம்: எனக்கு அன்பு செய்யவே நேரம் போதவில்லை, இதில் எங்கு நான் பிறரை வெறுக்க?

**அறிவுடைமை:**

அன்பு மட்டும் போதுமா? அறிவும் அவசியம். இதயமும் வேண்டும், மூளையும் வேண்டும். இரண்டையும் சமனாக பயன்படுத்த வேண்டும் என்பதை அறிவுடைமை மூலம் வலியுணர்த்துகிறார். இதயம் சொல்வதை கேள்; ஆனால் மூளையையும் உடன் எடுத்து செல் என்கிறார் வள்ளுவர்.

"எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவ தறிவு"

எது அறிவு? படிப்பது அறிவா? பட்டங்கள் அறிவா? பணம் சம்பாதிப்பது அறிவா?

உலக நெறிகளை ஆராய்ந்து அறிந்து, உலகத்தோடு ஒட்ட ஒழுகுதலே அறிவு என்கிறார்

வள்ளுவர். ஆங்கிலத்தில், 'Adaptability' என்பார்கள். எவன் ஒருவன் நூல்களில் எல்லாம் கற்றறிந்து பின்னர் அதை உலகத்தின் வழிகளோடு பொருத்தி ஒழுகி வாழ்கிறானோ அவனே அறிவுடையவன். 'உலகத்தோடு ஒட்ட ஒழுகுதல்' என்பது எல்லாவற்றிற்கும் தலை ஆட்டுவது அல்ல. மாறாக எது சரி? எது தவறு? என ஆராய்ந்து, சரி என்பதை உயர்ந்தாரோடு இணைந்து செய்வதே அறிவு.

'அறிவு அற்றங் காக்கும் கருவி' என்று கூறுவதன் பொருளும் அதுதான். நல்லது செய்யும்போது அன்பு மட்டும் போதாது, அறிவுடனும் யோசித்து செய்ய வேண்டும். அப்போது தான் எவ்வளவு எதிர்ப்பு வந்தாலும் அதை எதிர் கொள்ளும் வலிமை அறிவுக்கு மட்டுமே உண்டு என்கிறார் வள்ளுவர்.

**ஆள்வினையுடைமை:**

முயற்சி தான் ஒரு மனிதனை முழு மனிதனாக்கும். முயற்சி எடுக்கும்போது ஒரு மனிதன் வெற்றி பெறுகிறான் அல்லது வாழ்க்கைக்கு தேவையான பாடங்களை கற்றுக்கொள்கிறான் ஒரு போதும் தோல்வியடைவதில்லை. வெற்றி தான் ஒரு மனிதனை மாமனிதனாக்குகிறது.

"முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்"

முயற்சி என்பது ஆர்வமுடன் செயல்பட துணிவது. அந்த முயற்சி ஒரு மனிதனுக்கு நற்செயல்களை உருவாக்கும். முயற்சி அற்று இருப்பது அவனுக்கு வறுமையைச் சேர்த்துவிடும்.

வள்ளுவர் ஒரு படி மேலே போய், முயற்சி இல்லாமல் இருப்பவரை குறையுள்ளவர் என்றே சாடுகிறார். முயற்சி மனித இயல்பின் சாரம். முயற்சியின்றி இருப்பவன் குறை மைந்தன் என்பதே இந்த குறளின் நிதர்சனம்:

"பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி"

உடல் உறுப்பு செயலற்று இருப்பது குறை ஆகாது. அறிய வேண்டியவதை அறிந்து முயற்சி செய்யாது இருப்பதே குறை என்று கூறுகிறார் வள்ளுவர். அறிவோடு முயற்சியும் மனிதனுக்கு அவசியம் என்று வலியுறுத்துகிறார்.

**ஒழுக்கமுடைமை:**

அறிவு முயற்சி என்று என்னதான் நாம் கொண்டிருந்தாலும் வாழ்க்கையின் சிறந்த துணை என்று வள்ளுவர் கூறுவது ஒழுக்கம் தான்.

"பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை"

ஒழுக்கம் கடினமானது. ஒழுக்கம் உயர்வானது. ஒழுக்கம் பெற துன்பம் அடைந்து தான் ஆக வேண்டும். அதனால்தான் எத்தகைய துன்பத்தை ஏற்றாவது அதைக் காக்க வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

அதனால் தான் ஒழுக்கம் உயிரை விட உயர்ந்தது என்கிறார் வள்ளுவர். உயிர் முக்கியமா? ஒழுக்கம் முக்கியமா என்றால், வள்ளுவர் உயிரை சொல்லாமல் "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்றே மொழிவார்.

"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

**பண்புடைமை:**

மக்களுக்குரிய பண்பு இல்லாதவனை வள்ளுவர் மரம் என்கிறார். அப்பெடியென்றால் மனிதனை விலங்குகளிலிருந்து தனித்து காட்டுவது பண்பு தான். அறிவு உள்ளவரிடத்தில் பண்பு இல்லையேல் அது வெறும் மரமே என்கிறார். அறிவற்ற மனிதனிடம் பண்பு இருந்தால் அவன் உலகில் மதிப்பு பெறுவான். ஆனால் பண்பு இல்லையேல் அறிவிருந்தும் வீண்.

"அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்"

அறிவும் முயற்சியும் இருந்து ஒழுக்கமும் பண்பும் இல்லாத ஒரு மனிதன் எவ்வளவு தான் வெற்றி பெற்றாலும் எவ்வளவு தான் பொருள் சேர்த்தாலும் அதனால் என்ன பயன்? அது அவனுடைய பண்பற்ற தன்மையால் அச்செல்வம் யாருக்கும் பயனற்று போகும் என்று கூறுகிறார்.

"பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்

கலந்தீமை யால்திரிந் தற்று"

அந்த செல்வத்தால் ஒரு பயனும் இல்லை.

**சான்றாண்மை:**

மேற்சொன்ன ஐந்தையும் ஒரே அதிகாரத்தில் வள்ளுவர் உள்ளடக்குகிறார். அது தான் சான்றாண்மை.

**அன்பு அறிவு முயற்சி ஒழுக்கம் பண்பு சான்றாண்மை**

ஆண்மை என்ற சொல்லுக்கு ஆளும் தன்மை என்பது பொருள்.

வாளாண்மை வாளை ஆள்வது

தாளாண்மை தாளை ஆள்வது

வேளாண்மை வேளை (மண்ணை) ஆள்வது

சான்றாண்மை தன்னை ஆள்வது

மேற்கண்ட ஐந்து குணங்களையும் ஆள்பவர் ஆண்மையுடையோர். தனி மனித நடத்தையை மேற்கண்ட ஐந்து குணங்களும் நெறி படுத்துகின்றன.

ஆனால் சான்றாண்மை என்பது மற்றவர் பின்பற்றும்படி நடந்து காட்டும் ஆண்மை.

**சான்றாண்மை: ஐந்து உயர் குணங்களை சுட்டி காட்டுகிறது வள்ளுவம்:**

"அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால் ஊன்றிய தூண்"

எல்லோரிடத்திலும் அன்பாயிருத்தல்

பழி பாவங்களுக்கு அஞ்சி வாழ்தல்

எவரையும் உற்ற உறவாய் கொள்ளுதல்

எளியவர்க்கு உதவுதல்

உண்மை பேசி மகிழ்தல்

என்ற ஐந்து தூண்களின் மேல், மனித வாழ்க்கையை கட்டி எழுப்ப வழிகோலுகிறார் வள்ளுவர்.

இந்த ஐந்தையும் பின்பற்ற முடியவில்லை என்றால், இந்த இரண்டு குணங்களாவது பின்

பற்றுங்கள்:

"கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு"

வாள் முனை, கண்டவரை மட்டுமே கொல்லும்
நா முனை, கோட்டை கட்டி வாழ்பவரையும் கொல்லும்
வலிமையுடைய நாவை கட்டி ஆள்வது - சால்பு
பிறர் உயிரையும் தன் உயிர் போல் எண்ணுவது - நோன்பு
இந்த இரண்டு குணங்களாவது, மனிதனுக்கு தேவை என்கிறார் வள்ளுவர்.
இது கூட இல்லையென்றால், இந்த ஒன்றையாவது கொண்டிருங்கள் என்கிறார்:

"இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு"

தீமை செய்தவனுக்கும் நன்மை செய்து விடு என்கிறார். இது தீமை செய்தவனுக்கு கொடுக்கும் மிகப்பெரும் தண்டனை என்றே கருதுகிறார்.

இந்த ஒன்றும் கூட உன்னால் செய்ய முடியவில்லை என்றால், நீ மனிதன் என்று சொல்லி வாழ்வதில் பயனென்ன என்று சாடுகிறார்?

**முடிவுரை:**

"ஆளும் வளரனும் அறிவும் வளரனும் அதுதாண்டா வளர்ச்சி" என்ற பாடலை கேட்டிருப்பீர்கள். தனி மனித வளர்ச்சிக்கும், சமுதாய வளர்ச்சிக்கும், மனிதன் மட்டுமே முழுக்கக் காரணம். "உடல் வளர்த்தேன், உயிர் வளர்த்தேன்" என்ற தொடருக்கு இணங்க, மனிதனின் வாழ்க்கை பண்பட்டு இருக்க வேண்டி இந்த சிறு ஆய்வை மேற்கொண்டேன்.
தமிழன்பன் தனது கவிதையில் கூறுவதை போல
“மானிட மேன்மையைச் சாதித்திடக் குறள்
மட்டுமே போதுமே ஓதி நட” என்று அழகாய் விளக்குகிறார். இந்த மனித வாழ்க்கையை மேன்மையோடு வாழ, குறள் மட்டுமே போதும் என்கிறார்.

திருக்குறளை படிப்போம். சான்றோனை வாழ்வோம்.

**சான்றெண் விளக்கம்:**

1. திருக்குறள் கட்டுரைகள் - ஆசிரியர் கி. ஆ. பெ. விசுவநாதம் ப. 6 - 10
2. திருக்குறள் மெய்ப்பொருளுரை - பெருஞ்சித்திரனார்

**துணை நூற்பட்டியல்:**

1. திருக்குறள் மு. வரதராசனார் உரை
2. சமச்சீர் கல்வி ஒன்பதாம் வகுப்பு நூல் - தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை